பள்ளியிலே மூன்று ஆசிரியர்கள் உள்ளார்கள். ஒருவர் ஹிஸ்டரி, ஜாக்ரஃபி. இன்னொருவர் பாடக்காரர். மூன்றாமவர் தமிழ் ஆசிரியர். இப்படிப்பட்ட ஆசிரியர்கள் நியமிக்கப்படாமலிருப்பதால், கல்வியின் தரம் அதிகமாகப் பாதிக்கப்படுகிறது. இனியேனும் இந்தத் தவறுகள் நடக்காமலிருக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஆங்காங்கு ஏற்படுகின்ற ஒன்றிரண்டு குறைபாடுகளுக்கு என்ன காரணம் என்பதைத் தனித்தனியாகக் காண வேண்டும். ஆனால் குறிப்பிட்ட பாடத்தை நடத்துவதற்கு ஆசிரியரே இல்லை என்ற நிலை ஏற்படுமானால் என்ன மாற்றுத் திட்டம் என்று கவனிக்க வேண்டும். ஆசிரியர் இருந்தும் போடாமலிருந்தால், ஏன் போடவில்லை என்ற காரணங்களை அறிய வேண்டும். இப்பொழுது ஆண்டு ஆரம்பத்திலேயே பள்ளிகளிலே உள்ள காலியிடங்களை முன்னரே மதிப்பிட்டு வேலை தேடித்தரும் நிலையங்களிலே பட்டியலைப் பெறுவதற்கான நடவடிக்கையை கோடை விடுமுறையில் முடித்துவிடவேண்டும். பள்ளிகளிலே திரும்பவும் காலியிடங்களை நிறைவு செய்ய வேண்டுமென்று நியமனம் செய்யும் அலுவலர்கள்—அப்பாயின்டிங் அத்தாரிடீஸ்க்கு—அறிவுரை வழங்கும்படியாகப் பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

Representation from the Second Grade Tamil Pandits Association.

* 293 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether the Government have received any representation during November 1973, from the Second Grade Tamil Pandits Association; and

(*b*) if so, the details thereof?

இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் கழகத்தின் முறையீடு

திரு. கே. எஸ். கணபதி (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள் கழகத்திடமிருந்து, 1973-ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் முறையீடு ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

1974 ஏப்ரல் 10]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) அந்த விண்ணப்பத்தில் கண்ட ஐந்து கோரிக்கைகளேயும், அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையினேயும் கீழே காண்க :—

கோரிக்கைகள்

1. முதல்நிலே மற்றும் இரண்டாம் நிலேத் தமிழாசிரியர்களிடையே ஊதிய ஏற்றத் தாழ்வை நீக்கி அவர்களின் நிலேயினே ஒரே நிலே ஆக்குதல்.

2. தமிழில் புலவர் பட்டம் பெற்று பள்ளியிறுதித் தேர்வுக்குக் குறைந்த பொதுக் கல்வியுடைய தமிழாசிரியர் போதுமான கால அளவு பணிபுரிந்திருந்தால் அவர்கள் தமிழாசிரியர்கள் பயிற்சிக்கு சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

3. ஆசிரியர் பயிற்சி சான்றிதழ் பெறாத தமிழாசிரியர்களுக்கு தேவையான விலக்களித்து அவர்கள் ஊதிய உயர்வு பெற வழி வகை செய்தல்.

4. மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள பள்ளிகள் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் தமிழ் கற்பிக்க தமிழாசிரியர்களே நியமனம் செய்தல் குறித்து.

5. தமிழ் மொழியை 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான விருப்பப் பாடங்களில் ஒன்றாகக் கொள்ள வேண்டும்.

நடவடிக்கைகள்

1. இளநிலே தமிழாசிரியர்களே ஒரே நிலேயாக்கி அரசு அண்மையில் ஆணே வெளியிட்டுள்ளது. அதன்படி, முதல்நிலேக்கு முழுத்தகுதி பெற்ற, மற்றும் தகுதி பெறாத 10 ஆண்டுகள் பணிக்காலம் 1—1—1974-ல் முடிவு பெற்ற எல்லா இரண்டாம் நிலேத் தமிழாசிரியர்களுக்கும் முதல்நிலே ஊதியம் 1—1—1974-லிருந்து வழங்க ஆணே பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2. அரசின் பரிசீலனேயில் உள்ளது.

3 அரசின் பரிசீலனேயில் இருந்து வருகிறது.

4. தற்பொழுது செயற்பாட்டிலுள்ள விதிகளின்படி 6, 7, 8 வகுப்புகளுக்கு தமிழ் பயிற்றுவிக்க தமிழாசிரியர்கள்தான் நியமிக்கப்பட வேண்டும்.

5. தற்போதுள்ள பாடத் திட்டத்தின் கீழ் தமிழ் முதல் மொழியாக கற்றுத் தரப்படுகிறது. ஆகையால், இம்மொழியை விருப்பப்பாடமாக்க அவசியமில்லே என அரசு கருதுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, தமிழ்ப் புலவர் தேர்ச்சி பெற்றவர்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்கு விண்ணப்பம் செய்தால், அவர்கள் ஆசிரியர்கள் பணியிலிருந்து வந்திருக்கவேண்டும் என்று நிர்ப்பந்தத்தைச் சொல்கிறார்கள். ஆனால், பள்ளிக்கூடங்களுக்குச் சென்றால், பள்ளிக்கூட நிர்வாகி, பயிற்சி பெறாதவர்களை நியமிக்கமாட்டோம் என்கிறார். ஆக அரசின் ஆணையிலே இரண்டு முரண்பாடான நிலைகள் இருந்து, பயிற்சி பெறாமல் தவிக்கிறார்கள். அரசு இதுபற்றிப் பரிசீலிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் கோரிக்கைதான் அரசின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

திரு. கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, அரசு இரு நிலையை ஒழித்து இரண்டாம் நிலை தமிழாசிரியர்கள் அனைவரையும் முதல்நிலைக்கு உயர்த்தியுள்ளது. இருந்தாலும், இரண்டாம் நிலையிலிருந்து முதல்நிலைக்கு உயர்த்தப்பட்ட தமிழாசிரியர்கள் 9, 10, 11 ஆகிய மூன்று வகுப்புகளில் தமிழ்ப் பாடம் கற்றுத் தருவதற்கான வாய்ப்பு அளிக்கப்படவில்லை. அந்த வாய்ப்பை அவர்களுக்கு அளிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இனிமேல் எல்லோருமே முதல்நிலை தமிழாசிரியர்களாகத்தான் நியமிக்கப் படுவார்கள் என்ற கொள்கையை ஏற்றதற்குப் பிறகு, மேல் வகுப்புகளுக்கு யார் போதிப்பது, கீழ் வகுப்புகளுக்கு யார் போதிப்பது என்றால், யார் சீனியரோ அவர்தான் மேல்வகுப்புக்கும், யார் ஜுனியராக வருகிறார்களோ அவர்கள்தான் கீழ்வகுப்புகளுக்கும் போதிக்கின்ற நிலை ஏற்பட வேண்டுமே தவிர, இப்பொழுது இருக்கிற சூழ்நிலைகளில் 6, 7, 8 ஆகிய வகுப்புகளுக்கு இரண்டாம் நிலை தமிழாசிரியர்களும், 9, 10, 11 ஆம் வகுப்புகளுக்கு மேல்நிலை தமிழாசிரியர்களும் என்று வைத்திருக்கிறோம். ஆனால் இரண்டாவது நிலையிலே முதல்நிலை தமிழாசிரியர்கள் போதித்துக்கொண்டிருக்கிறார்கள். எல்லோரும் ஒரேநிலை என்று வரும்போது, சீனியர்களை மேல் வகுப்புக்கும், ஜுனியர்களை கீழ் வகுப்புக்கும் போடவேண்டிய அவசியம் ஏற்படும்.

(பிற்பகல் 4-10)

திரு. கே. ராஜாராம் : தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலே 6, 7 மற்றும் எட்டாவது வகுப்புகளுக்கு தமிழ் ஆசிரியர்கள் தனியாக நியமிக்கப் படுகின்றார்கள். ஆனால் அதே மாதிரி உயர் தொடக்கப் பள்ளிகளிலே, 6, 7 மற்றும் 8-வது வகுப்புகளிலே தமிழை போதிப்பதற்காக தனியாகத் தமிழ்

1974 ஏப்ரல் 10]

ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதில்லை. இங்கேயும் 6, 7 மற்றும் 8-வது வகுப்புகளிலுள்ள குழந்தைகள் தமிழ் பயிலுகின்றார்கள். எனவே இங்கேயும் தமிழ் ஆசிரியர்களைத் தனியாக நியமித்தால், அவர்களிடையே உள்ள வேலையில்லாத் திண்டாட்டம் குறையக்கூடும். எனவே அவர்களை ஏன் நியமிக்கக்கூடாது என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, உயர்நிலைப் பள்ளிகளில் தமிழாசிரியர்கள் நியமிக்கப்படுகின்றார்கள். ஆனால் உயர் துவக்கப் பள்ளிகளைப் பொறுத்த மட்டில், நான்கு செக்ஷன்கள் அல்லது அதற்கு மேலிருந்தால், அதாவது 6, 7 மற்றும் 8-வது வகுப்புகளில் அப்படி இருந்தால், தமிழாசிரியர்களை நியமித்துக்கொள்ளலாம் என்று விதி இருக்கின்றது. அனுமதி பெற்று நியமித்துக்கொள்ளலாம்.

திரு. கே. எஸ். கணபதி : தலைவரவர்களே, 1964-க்கு முன்பு தமிழாசிரியர்கள், வட மொழி ஆசிரியர்கள் என்று "இரண்டு மொழி" ஆசிரியர்கள் இருந்து வந்தார்கள். இப்போது பத்தாண்டு காலப் பணிக்குப் பிறகு ஆசிரியர்கள் முதல் நிலை பெற இடமிருக்கும் நிலையில் இவர்கள் இருமொழி ஆசிரியர்களாகப் பணியாற்றிய காலமும் கணக்கில் சேர்த்துக்கொள்ளப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய குறிப்பில்லை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவரவர்களே, உயர் தொடக்கப் பள்ளிகளிலே அவசியமிருந்தால், அனுமதி பெற்று தமிழாசிரியர்களை நியமித்துக் கொள்ளலாம் என்று இருந்தாலும், நடைமுறையில் அதற்கான அனுமதி எளிதாக வழங்கப்படுவதில்லை. நியமிப்பதற்கு ஆணையிடும் அதிகாரிகள் நீதியின் அடிப்படையில் அதைச் சீக்கிரம் வழங்குவதில்லை. ஆகவே ஒரு தேக்க நிலை ஏற்படுகிறது. எனவே இதில் நியாயமான ஒரு ஏற்பாட்டிற்கு அரசு உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இரண்டு மூன்று செக்ஷன்கள் மட்டுமே இருந்தால், தமிழாசிரியர்களுக்கு முழு வேலை இராது. ஆகவே நான்கு செக்ஷன்கள் இருக்கும் இடத்தில் வைத்துக்கொள்ளலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட அனுமதியை உரிய அதிகாரிகளிடம் பெற்றுக்கொள்ளலாம்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, உயர் தொடக்கப்பள்ளிகளிலே 6, 7, 8-வது வகுப்புகளிலே தமிழாசிரியர்களை நியமிக்க வேண்டிய அவசியமிருந்தால், அனுமதி பெற்று நியமிக்கலாம் என்று இருந்தாலும், நான்கு பிரிவுகள் இருந்தும்கூட அண்மையிலே அப்படிப்பட்ட அனுமதி வழங்கப் படுவதில்லை. ஆகவே இந்த உத்தரவு திருத்தியமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்): தலைவரவர்களே, இது பற்றித் தனியாக ஆராயலாம்.

Teaching Grant.

* 294. Q.—THIRU K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) whether it is a fact that Government sanctions teaching grant to Colleges which prepare students for oriental title in Tamil;

(*b*) Whether there is any College in Salem District which has not been sanctioned the same; and

(*c*) if so, the reasons therefor?

கல்வி மானியம்

திரு. கே. எஸ். கணபதி: மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழில் வித்துவான் பட்டம் பெற மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கும் கல்லூரிகளுக்கு அரசு கல்வி மானியம் வழங்குகிறதென்பது உண்மையா?

(இ) சேலம் மாவட்டத்தில் அத்தகைய மானியம் வழங்கப்படாத கல்லூரி ஏதேனுமுள்ளதா?

(உ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) ஆம். சுப்பிரமணியம் தமிழ்க் கல்லூரிக்கு (மோஹனூர்) அரசு மான்யம் வழங்கப்படவில்லை.

(உ) பல்கலைக் கழகம் இணைப்புக்காக விதித்துள்ள நிபந்தனைகளை இக்கல்லூரி நிறைவேற்றாததால் அரசு மான்யம் வழங்கப்படவில்லை.